மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

முன்னிலை :-திருமதி.ஜா.ஆ.ஃப்ரீன் பேகம், எம்.காம்., எல்.எல்.எம்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ம் நாள் வியாழக்கிழமை

இடைநிலை மனு எண்.9/2026 மற்றும்

இடைநிலை மனு எண்.10/2026

உள்

அசல் வழக்கு எண்.73/2015

வேலாயுதம் ... மனுதாரர்/1ம் பிரதிவாதி

... எதிர் ...

அறிவழகன் ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி

2. மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல்
3. கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, திண்டுக்கல்
4. வட்டாட்சியர், நத்தம்
5. செயல் அலுவலர், நத்தம். ... 2, 3, 4, 5 எதிர்மனுதார்கள்/ 2, 3, 4, 5 பிரதிவாதிகள்

இந்த மனுக்களானது 30.03.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 27.04.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஜேம்ஸ் ஜான் பிரிட்டோ, அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாலகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.P.கிருஷ்ணமூர்த்தி, அவர்கள் முன்னிலையாகியும், மனுக்கள் மற்றும்

ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டு இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.

<u>பொதுவான உத்தரவு</u>

**<u>இ.ம எண்.9/2026</u>**

இம்மனுவானது, கடந்த 30.10.2024 ம் தேதி வாதி தரப்பு சாட்சியம் முடித்து வைக்கப்பட்டு Argument நிலையில் உள்ள மேற்படி அசல் வழக்கில் வாதியை சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய வழக்கினை Re-open செய்ய அனுமதி வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 151 ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இ.ம எண்.10/2026</u>**

இம்மனுவானது, கடந்த 30.10.2024 ம் தேதி வாதி தரப்பு சாட்சியம் முடித்து வைக்கப்பட்டு Argument நிலையில் உள்ள மேற்படி அசல் வழக்கில் வாதியை சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய வேண்டி மேற்படி சாட்சியை Recall செய்து உத்தரவாக வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2) மனுக்களின் சுருக்கம்:</u>

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதியாவார். இம்மனுவில் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சியம் 30.10.2024 ம் முடிக்கப்பட்டு, 2 முதல் 5 வரை உள்ள பிரதிவாதிகளின் சாட்சியம் கடந்த 21.04.2025 ம் தேதி முடித்து வைக்கப்பட்டு தற்போது Argument செய்ய வேண்டி வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை தாக்கல் செய்யாமல் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளதால், தனது தரப்பில்

அவர்களை குறுக்கு விசாரணை செய்ய தனக்கு வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டதாகவும், இந்த அசல் வழக்கில் 4 ம் பிரதிவாதியான வட்டாட்சியர், நத்தம் அவர்களை இவ்வழக்கு தொடர்பாக ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து அவரை ஒரு சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டு, தனது தரப்பு 3 ம் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டு கடந்த 09.03.2026 ம் தேதி மேற்படி சாட்சியம் முடித்துவைக்கப்பட்டது.

2.2) இந்நிலையில் கடந்த 06.03.2026 ம் தேதி தனது தரப்பு 3 வது சாட்சியான நத்தம் வட்டாட்சியர் அவர்களை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் போது, தனது தரப்பு சாட்சியின் குறுக்கு விசாரணையில் வாதி தரப்பு ஆவணங்களை சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது. மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதற்கு தனது தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்ட சூழலில் நீதிமன்றம் தனது ஆட்சேபத்தை ஏற்றுக்கொண்டு முறையாக மனுச்செய்து வாதியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிப்பதாக உத்திரவிட்டது. மேற்படி வாதி தரப்பு ஆவணங்களை வைத்து வாதியை குறுக்கு விசாரணை செய்யும் போது நீதிமன்றத்திற்கு மேற்படி வழக்கு தொடர்பான பொருண்மைகளை தெளிவுப்படுத்தவும் மற்றும் வழக்கு தொடர்பாக தீர்வு காண்பதற்கும் வாதியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய அவசியம் உள்ளதால், மேற்படி வாதியை சாட்சியாக குறுக்கு விசாரணை செய்வதற்கு Re-open செய்து, சாட்சியை Recall செய்து உத்தரவிட வேண்டி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிருரைக்களின் சுருக்கம் :**

1ம் எதிர்மனுதாரர்/ வாதி தனது எதிருரையில், மனுதாரர்/1ம் பிரதிவாதி மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், வாதியை குறுக்கு விசாரணை செய்யும்போது மேற்படி வழக்கிற்கு தீர்வு கிடைக்கும் என்றும், மேற்படி சாட்சியம் நீதிமன்றத்திற்கு வழக்கு தொடர்பான பொருண்மைகளையும் புதிய விவரங்களையும் தெளிவுபடுத்துவதற்கு சட்டப்படி அவசியம் என கூறி மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு Re-open-Recall மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் 30.10.2024ம் தேதி வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது என மனுதாரர்/1ம் பிரதிவாதியே ஒப்புக் கொண்டுள்ளார்.

3.2) மேலும், 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி செய்யாமல் விடுபட்டதால் 4ம் பிரதிவாதியான நத்தம் தாசில்தாரை மனுதார்/1ம் பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பாக வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பிலும் நத்தம் வட்டாட்சியரை குறுக்கு விசாரணை செய்து மனு முடிக்கப்பட்டு தற்போது Argument செய்ய வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், மனுவில் வாதி தரப்பு ஆவணங்களை வைத்து வாதியை குறுக்கு விசாரணை செய்வது நீதிமன்றத்திற்கு மேற்படி வழக்கு தொடர்பான பொருண்மைகளை தெளிவுபடுத்தவும் மற்றும் வழக்கு தொடர்பாக முடிவு எடுப்பதற்கும் அவசியம் என கூறப்பட்டுள்ளது. மேற்படி காரணங்கள் ஏற்புடையதல்ல என்றும், ஏற்கனவே வாதியை 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது. புதிய விவரங்கள் இந்த வழக்கை குழப்பமடைய செய்யுமே தவிர தெளிவுபடுத்தாது. இவ்வழக்கில் வாதி தரப்பு, பிரதிவாதிகள் தரப்பு விசாரணை, குறுக்கு

விசாரணை அனைத்தும் ஆவணங்கள் தொடர்பாக முடிவு பெற்றுவிட்டது. மீண்டும் வாதியை குறுக்கு விசாரணை செய்வதால் வழக்கின் மொத்த அமைப்பும் மாறுபடும். எனவே, இந்த மனுக்கள் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) இருதரப்பிலும் சாட்சிய, சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுக்கள், அபிடவிட்கள் மற்றும் எதிருரைகள் பரிசீலனை செய்யப்பட்டது.

5) இந்த மனுக்களில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்? மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுக்கள் பரிகாரம் கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

6) <u>தீர்வு</u>

மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதங்களின்போது அசல் வழக்கு வாத நிலையில் உள்ளபோது, 06.03.2026 அன்று 3-ம் பிரதிவாதியான வட்டாட்சியர் (DW-3) சாட்சியம் அளித்தபோது, வாதி தரப்பில் சில ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. அந்த ஆவணங்களின் அடிப்படையில் வாதியை குறுக்கு விசாரணை செய்வது வழக்கின் பொருண்மைகளை நீதிமன்றத்திற்குத் தெளிவுபடுத்தவும், வழக்குத் தீர்வுக்கு வழிவகுக்கவும் அவசியமானது. எனவே, நீதியின் நலன் கருதி வழக்கை Re-open செய்து, சாட்சியை Recall செய்ய வேண்டியது அவசியம் என்று எடுத்துரைத்தார்.

6.2) மாறாக எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதங்களின்போது வாதி தரப்பு மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியங்கள் அனைத்தும் முழுமையாக முடிந்துவிட்டன. ஏற்கனவே வாதியை மனுதாரர் தரப்பில் விரிவாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது. 3-ம் பிரதிவாதி (வட்டாட்சியர்) மூலம் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட போது இரு தரப்பிலும் குறுக்கு விசாரணை நடந்து முடிந்துள்ளது. தற்போது மீண்டும் வாதியை குறுக்கு விசாரணைக்கு அழைப்பது வழக்கின் தன்மையை மாற்றுவதோடு, தேவையற்ற குழப்பத்தையும் காலதாமதத்தையும் ஏற்படுத்தும். எனவே, இம்மனுக்கள் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6.3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வாதங்கள் மற்றும் மனுக்கள் மற்றும் வழக்கு கோப்பு கவனமாகப் பரிசீலிக்கப்பட்டன. இம்மனுவானது உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 151-ன் கீழும், கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழும் ஏற்கனவே சாட்சியங்கள் முடிக்கப்பட்டு வாதத்திற்காக நிலுவையில் உள்ள இவ்வழக்கினை மீண்டும் விசாரணைக்காக Re-open செய்து, வாதியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி மனுதாரர்/1-ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.4) இவ்வழக்கில் 06.03.2026 அன்று 3-ம் பிரதிவாதியான நத்தம் வட்டாட்சியர் (DW-3) விசாரணையின் போது, வாதி தரப்பில் சில ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதை இரு தரப்பும் ஒப்புக் கொள்கின்றார்கள். சாட்சியம் முடிந்துவிட்ட நிலையில் புதிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருந்தால், அது தொடர்பாகத் தொடர்புடைய சாட்சியை (வாதியை) மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்குவது இயற்கை நீதிக்கு உட்பட்டதாகும்.

எதிர்மனுதாரர் தரப்பில் புதிய விவரங்களையும் தெளிவுபடுத்த மனு தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது தவறானது என்றும், அவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வாதியை மீண்டும் குறுக்கு விசாரணை செய்வதால் குழப்பங்கள் ஏற்படும் என்று தெரிவித்துள்ள காரணம் ஏற்புடையதல்ல. புதிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள நிலையில் அது தொடர்பாக குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்புகள் வழங்கப்படும் பட்சத்தில் தான் புதிய ஆவணங்கள் மற்றும் அதன் தொடர்புடைமை ஆகியவற்றை தெளிவுபடுத்தவும், வழக்கின் தீர்வுக்கு மேற்படி ஆவணங்களின் முக்கியத்தும் மற்றும் அது தொடர்பான நிலைப்பாடு ஆகியவற்றை தெளிவுபடுத்தவும் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக, இம்மனுக்கள் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த பொது உத்தரவுக்கள் ஆனது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.30 18:23:12 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**நத்தம்.**

**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-இல்லை.**

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.30 18:23:23 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**நத்தம்.**